# 19. காயீன் ஆபேல்



ஓர் ஊரில் ஒரு விளை நிலம் இருந்தது. அது மிகவும் செழிப்பான தோட்டமாக இருந்தது. நெல், கோதுமை, பழமரங்கள் என்பன செழிப்பாக வளர்ந்திருந்தன அந்தத் தோட்டத்திற்குச் சொந்தக்காரன் காயீன். அவர் தனது தோட்டத்தைப் பார்துப் பெருமைப்படுவார். அவர் தமது தோட்டத்தை மிகக் கவனமாக பாதுகாத்து வந்தார். அவருக்கு இறை தந்தை துணையாக இருந்தார்.

ஆனால் அவர் ஒரு உலோபி. இந்தச் செழிப்பான தோட்டத்தைத் தந்த இறை தந்தைக்குப் பதர் நெற்கதிர்களையும் அழுகிய கனிகளையும் காணிக் கையாக கொடுத்தார். இறை தந்தை அவரது காணிக்கையின் மட்டில் மகிழ்ச்சி அடையவில்லை.



காயீனுடைய சகோதரன் ஆபேல். அவனுக்குச் செம்மறியாட்டு மந்தை ஒன்று இருந்தது. இவர்கள் இருவரும் ஆதாம் ஏவாளுடைய பிள்ளைகள். இறை தந்தை ஆபேலுக்கு உதவி செய்தார். ஆனபடியால் ஆபேலுடைய செம்மறியாடுகளும் நன்றாகக் கொழுத்திருந்தன.

ஆபேல் மிகவும் நல்லவர். அவர் தமது மந்தையில் இருந்த செழிப்பான நல்ல கொழுத்த ஆட்டுக்குட்டி ஒன்றை இறை தந்தைக்கென வேறாக்கி வைத்திருந்தார். இறை தந்தை அதைப்பற்றி மிகவும் சந்தோசப்பட்டார் நாமும் நல்லவைகளையே இறைதந்தைக்குக் கொடுப்போம்.